

**eduresourceza.com**

Downloaded from eduresourceza.com

NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2022

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 9 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. Number your answers exactly as the questions are numbered.
5. All answers must be in TAMIL.
6. It is in your interest to write legibly and to present your work neatly.

---

Downloaded from eduresourceza.com

IEB Copyright © 2022 

Downloaded from eduresourceza.com


**SECTION A**

**QUESTION 1**

**பகுதி ஒன்று**

**கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக**

**<u>வித்தல்பாய் பட்டேலின் அடக்கம்</u>**

இரண்டு ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டினைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் ஒரு நாள் தில்லி சட்டசபையைச் சுற்றிப்பார்க்க வந்தனர். கட்டிடத்தின் வாசலில் ஒருவர் பொதுவான உடையில் அடக்கமாக நின்று கொண்டிருந்தார். கட்டிடத்தைச் சுற்றிப் பார்க்க வந்த ஆங்கிலேயர்கள் வாசலில் நின்று கொண்டிருந்தவரைப் பார்த்து, “நாங்கள் சட்டசபைக் கட்டிடத்தைச் சுற்றிப்பார்க்க வேண்டும்; நீவிர் உடன் வந்து எல்லாவற்றையும் எங்களுக்கு காட்டும். உமக்குத் தகுந்த பரிசில் தருகிறோம்,” என்று சொல்லிக் கூப்பிட்டார்கள். அவரும் அப்படியே அவர்களுடன் சென்று எல்லாவற்றையும் காட்டி விளக்கிக் கூறினார்.

அவ்வாங்கிலேயர்கள் வெளியே செல்லும்போது ஒரு ரூபாவை எடுத்துத், தம்முடன் வந்து எல்லாவற்றையும் காட்டிய அப் பேர்வழிக்குக் கொடுத்தனர். அவரோ அந்த ரூபாவை வந்தனத்துடன் மறுத்துவிட்டார். மறுதினம் சட்டசபை கூடியது. முதல் நாள் சட்டசபைக் கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்த ஆங்கி லேயர்கள், சட்டசபை நடவடிக்கைகளைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர். சட்டசபைத் தலைவரின் இருக்கையில் அமர்ந்திருக்கும் பேர்வழியைப் பார்த்தபோது அவர்களுக்கு மிகுந்த வியப்பு உண்டாகியது. முதல் நாள் தங்களுக்குக் கட்டிடத்தைச் சுற்றிக்காட்டிய பேர்வழியே தலைவராயிருக்கக் கண்டனர். அவர்தாம் வித்தல்பாய் பட்டேல் என்னும் பெரியார்.

ஆங்கிலேயர்கள் சட்டசபைக் கூட்டம் முடியும் வரை இருந்தனர். கூட்டம் முடிந்தவுடன் அவர்கள் தலைவரிடம் சென்றனர். முதல் நாள் நடந்ததைக் கூறித், “தம் தவற்றினைப் பொறுக்கவேண்டும்” என்று வேண்டிக்கொண்டார்கள். வித்தல்பாய் பட்டேல் அவ்வாங்கிலேயர்களைப் பார்த்து, “நீங்கள் எனக்கு என்ன தவறு செய்தீர்கள்? நீங்கள் தவறு செய்திருந்தால் தானே நான் பொறுக்கவேண்டும்? உங்களுக்குத் தெரியாதவற்றைக் காட்டச் சொன்னீர்கள்; காட்டினேன். இதில் ஒன்றும் தவறில்லையே?” என்றார். வித்தல்பாய் பட்டேலின் அடக்கம் உடைமையும், பெருந் தன்மையும் எல்லோருக்கும் தெரிந்தன. வித்தல்பாய் பட்டேலை அனைவரும் போற்றினர்.

*“செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து*
*ஆற்றின் அடங்கப் பெறின்”*

***ஆசிரியர்: திரு க இனியன்***

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2022

Downloaded from eduresourceza.com


1.1 **காலி இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக**

1.1.1 இரண்டு ____________________ இந்திய நாட்டினைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். (1)

1.1.2 ______________________ அப்படியே அவர்களுடன் சென்று எல்லாவற்றையும் காட்டி விளக்கிக் கூறினார். (1)

1.1.3 அவ்வாங்கிலேயர்கள் வெளியே __________________________ அவ்வாங்கிலேயர்கள் வெளியே (1)

1.1.4 முதல் நாள் தங்களுக்குக் கட்டிடத்தைச் சுற்றிக்காட்டிய பேர்வழியே கண்டனர்.__________________ கண்டனர் (1)

1.1.5 கூட்டம் முடிந்தவுடன் அவர்கள் தலைவரிடம் _______________ (1)

1.2 **கீழ்வரும் கேள்விகளுக்கு விடை தருக**

1.2.1 யார் இந்திய நாட்டினைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார் ? (2)

1.2.2 அவர்கள் ஒரு நாள் எங்கே சுற்றிப்பார்க்க வந்தனர் ? (2)

1.2.3 வெளியே செல்லும் போது அப்பேர்வழிக்கு என்ன கொடுத்தனர் ? (2)

1.2.4 கூட்டம் முடிந்தவுடன் அவர்கள் யாரிடம் சென்றனர் ? (2)

1.2.5 முதல் நாள் என்ன நடந்ததைக் கூறி என்ன பொறுக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள் ? (2)

1.3 **எது சரி எது தவறு எனக் கூறுக**

1.3.1 அவர்கள் ஒரு நாள் தில்லி சட்டசபையைச் சுற்றிப்பார்க்க வந்தனர். (1)

1.3.2 கட்டிடத்தின் வாசலில் பலர் பொதுவான உடையில் அடக்கமாக நின்று கொண்டிருந்தார்கள். (1)

1.3.3 மறுதினம் சட்டசபை கூடியது. (1)

1.3.4 கடைசி நாள் சட்டசபை கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்த ஆங்கிலேயர்கள் சட்டசபை நடவடிக்கைகளைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர். (1)

1.3.5 வித்தல்பாய் பட்டேலை அனைவரும் போற்றினர். (1)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com


1.4 ஒருமைக்குப் பன்மை எழுதுக **எ.கா. அறை → அறைகள்**

1.4.1 கொடி (1)

1.4.2 நாடு (1)

1.4.3 வந்தான் (1)

1.4.4 நான் (1)

1.4.5 கொடுத்தாள் (1)

1.4.6 மனிதன் (1)

1.4.7 பொருள் (1)

1.5 எதிர்ச்சொல் எழுதுக **எ.கா. பிறப்பு → இறப்பு**

1.5.1 முதல் (1)

1.5.2 ஒற்றுமை (1)

1.5.3 முன்னால் (1)

1.5.4 இவருடைய (1)

1.5.5 எடுத்தார் (1)

1.6 **கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.**

வேடன் ஒருவன் தான் கொண்டு வந்திருந்த வலையைக் காட்டின் ஒரு பகுதியில் விரித்தான். அங்கே இருந்தபடியே காடைப் பறவையைப் போலக் குரல் எழுப்பினான் அவன்.

அந்தக் குரல் கேட்டுக் கூட்டமாக வந்த காடைப் பறவைகள் வலைக்குள் சிக்கிக் கொண்டன. அந்தப் பறுவைகளின் அரசன் சொன்ன அறிவுரை அவற்றிற்கு நினைவுக்கு வந்தது.

“நீங்கள் கூட்டமாக வலையில் சிக்க நேரிடும், அப்படி நேர்ந்தால் ஒவ்வொருவரும் வலையில் உள்ள கண் வழியாகத் தலையை வெளியே நீட்டுங்கள். எல்லாரும் ஒற்றுமையாக வலையைத் தூக்கிக் கொண்டு பறந்து செல்லுங்கள். பிறகு, அந்த வலையை முள் மரத்தின் மீது தொங்க விடுங்கள். பிறகு வலையின் அடிப்பகுதி வழியாக வெளியே வந்து தப்பித்துச் செல்லுங்கள்” என்பதுதான் அரசன் சொன்ன அறிவுரை.

***பேராசிரியர், முனைவர் மு. பொன்னவைக்கோ***

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2022

Downloaded from eduresourceza.com


1.6.1 பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும் ? (1)

1.6.2 மேற்காணும் பகுதியிலிருந்து மூன்று (3) பெயர்ச்சொற்களை எழுதுக. (3)

1.6.3 இரண்டு (2) திணை வகைகளை எழுதுக. (2)

1.6.4 இரண்டு (2) சுட்டு எழுதுக்களை எழுதுக. (2)

1.6.5 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) வினைச்சொற்களை எழுதுக. (2)

1.6.6 இரண்டு (2) வினா எழுதுக்களை எழுதுக. (2)

1.7 **சேர்த்து எழுதுக எ.கா: பச்சை + கிளி = பச்சைக்கிளி**

1.7.1 அந்த + குரல் (1)

1.7.2 குப்பை + தொட்டி (1)

1.7.3 தூக்கி + கொண்டு (1)

1.7.4 வீட்டில் + உள்ள (1)

1.7.5 கோ + இல் (1)

1.8 **ஆண்பாலுக்கு பெண்பால் எழுதுக எ.கா: அழகன் → அழகி**

1.8.1 அரசன் (1)

1.8.2 மணமகன் (1)

1.8.3 பாடகன் (1)

1.8.4 கிழவன் (1)

1.9 **சரியாக எழுதுக எ.கா: காடு → காட்டுக்கு**

1.9.1 இந்தப் <u>பறவை</u> பிடித்தேன். (1)

1.9.2 அரசன் <u>அரண்மனை</u> வந்தான். (1)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com


1.10 **பிரித்து எழுதுக எ.கா: வெள்ளித்தட்டு → வெள்ளி + தட்டு**

1.10.1 சிக்கிக்கொண்டான் (1)

1.10.2 காடைப்பறவை (1)

1.10.3 கோலாட்டம் (1)

1.10.4 முரட்டுக்காளை (1)

1.11 **தமிழில் மொழி பெயர்த்து எழுதுக**

***எ.கா:*** *She is running → அவள் ஓடுகிறாள்.*

She is singing. (பாடு) (1)

**60 marks**

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2022

Downloaded from eduresourceza.com


**SECTION B**

**QUESTION 2**

**பகுதி இரண்டு**

**கொன்றை வேந்தன்**

2.1 **கொடுக்கப்பட்ட கொன்றை வேந்தன் விளக்கக் கதைகளிலிருந்து ஏதேனும் ஒரு கதையை முடிவு செய்க. [Complete any 1 story]**

2.1.1 ஒரு காலத்தில் இரண்டு நண்பர்கள் ____________________

**அல்லது (OR)**

2.1.2 ஓர் ஊரில் பச்சையப்பன் என்ற ________________________ (6)

2.2 **அடைப்புக்குறியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொற்களைப் பொறுக்கி எடுத்து கீழ்வரும் கொன்றை வேந்தன் வரிகளை முடிவு செய்க**

2.2.1 ______________ முன்னறி தெய்வம் (1)

2.2.2 ஊருடன் பகைக்கின் ________________ (1)

2.2.3 ஒருவனைப் பற்றி ________________ (1)

2.2.4 ______________ ஆக்கத்திற்கு அழிவு (1)

( வேருடன் கெடும் , அன்னையும் பிதாவும் , ஔவியம் பேசுதல் , ஓரகத்து இரு )

2.3 **திருக்குறள்**

2.3.1 **அடைப்புக்குறியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொற்களைப் பொறுக்கி எடுத்து கீழ்வரும் குறள்களை நிறைவு செய்க**

(a) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் ____________ (1)

(b) ______________ சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல (1)

(c) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க ________ (1)

(d) ______________ இல்வாழக்கை பண்பும் பயனும் அது (1)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com


( நெறிநின்றார் நீடுவாழ் வார் ; அன்பும் அறனும் உடைத்தாயின் ; முதற்றே உலகு ; வேண்டுதல் வேண்டாமை இலான் அடி )

2.3.2 **கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக**

(a) திருக்குறளை எழுதியவர் யார்? (1)

(b) திருக்குறளில் எத்தனை குறள்கள் உள்ளன? (2)

(c) திருக்குறளின் மூன்று பகுதிகளை எழுதுக. (3)

2.4 **வாழ்க்கை வரலாறு**

2.4.1 திருவள்ளுவரைப் பற்றி சுமார் 4 -5 வரிகளை எழுதுக.

**அல்லது (OR)**

2.4.2 ஔவையாரைப் பற்றி சுமார் 4–5 வரிகளை எழுதுக. (8)

**[28]**

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2022

Downloaded from eduresourceza.com


**QUESTION 3**

**பகுதி மூன்று**

**கவிதை: பாப்பாப் பாட்டு**

இப்பகுதியைப் படித்துக், கேள்விகளுக்குச் சரியான விடை தருக:

*கொத்தித் திரியும் அந்தக் கோழி – அதைக்*
*கூட்டி விளையாடு பாப்பா*
*எத்தித் திருடும் அந்தக் காக்காய் – அதற்கு*
*இரக்கப் படவேணும் பாப்பா*
*பாலைப் பொழிந்து தரும் பாப்பா – அந்தப்*
*பசுமிக நல்லதடி பாப்பா*
*வாலைக் குழைத்துவரும் நாய்தான் – அது*
*மனிதர்க்குத் தோழனடி பாப்பா*
*வண்டி இழுக்கும் நல்லகுதிரை – நெல்லு*
*வயலில் உழுதுவரும் மாடு*
*அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு – இவை*
*ஆதரிக்க வேணுமடி பாப்பா*

***கேள்விகளுக்கு விடை தருக***

3.1 இந்தக் கவிதையை எழுதியவர் யார் ? (1)

3.2 கவிதையிலிருந்து இரண்டு (2) விலங்குகளின் பெயர்களை எழுதுக. (2)

3.3 பாப்பா இன்னொரு குழுந்தையை என்ன செய்யக் கூடாது ? (2)

3.4 எந்த விலங்கு மிக நல்லது ? (1)

3.5 கவிதையிலிருந்து இரண்டு (2) பறவைகளின் பெயர்களை எழுதுக. (2)

3.6 எந்தப் பறவை கொத்தித் திரியும் ? (2)

3.7 பாப்பாவிடம் எந்தெந்த தீமைகள் இருக்கக் கூடாது ? (2)
**[12]**

**40 marks**

**Total: 100 marks**

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2022